ஏழு ஆண்டுகளாக பயன்பாடின்றிக் கிடக்கும் செங்கல்பட்டு நவீன தடுப்பூசி ஆலை வளாகம்!

# ஆலையை இயக்க ஒன்றிய அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி



புதுடெல்லி,ஆக.9-

செங்கல்பட்டு அருகே ரூ.900 கோடி செலவில் ஒன்றிய பொதுத்துறை நிறுவனமான ஹெ.எவ்.எல். பயோடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேக்சின் தடுப்பூசி மருந்து ஆலை இன்னும் செயல்படத்துவங்கவில்லை என்பது உண்மை தானா? அப்படியென்றால் அதற்கான காரணங்கள் என்ன? ஆலையை இயக்கவும் தடுப்பூசி உற்பத்தியை மேற்கொள்ள ஏதேனும் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளதா? அப்படியானால் அந்த கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

என செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் அருகே அமைந்துள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான நவீன தடுப்பூசி மருந்துகள் ஆலை கட்டிமுடிக்கப்பட்டு பல ஆண்டுகள் கழிந்தும் இயக்கத்துக்கு வராமல் பயனின்றிக் கிடக்கும் நிலை குறித்த கவலையைத் தெரிவிக்கும் முகத்தான் இந்த கேள்வியை இராவிட முன்னேற்ற கழகத்தின் பொருளாளரும் மக்களவை திமுக குழுத் தலைவருமான டி. ஆர்.பாலு அவர்கள் எழுப்பி இருந்தார்.

இந்நிலையில் ஒன்றிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் அமைச்சகத்தின் இணை அமைச்சரான திரு. பிரதாப் ராவ் ஜாதவ் அவர்கள் நேற்று(7.8.2026) மக்களவையில் எழுத்து பூர்வமான மிகமிக சுருக்கமான விவரங்கள் இல்லாத ஒரு பதிலை அளித்தார்.

அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் தனது பதிலில் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

ஒன்றிய அரசின் ஹெ.பி.எல். எனப்படும் ஹெ.எல். எல், பயோடெக் லிமிடெட் HLL Biotech Ltd) நிறுவனம் செங்கல்பட்டு, தமிழ்நாடு அருகே ஒருங்கிணைந்த வேக்சின் (தடுப்பூசிகள்) வளாகம் ஒன்றை உருவாக்கிட அனுமதி அளித்திருந்தது. அந்த தடுப்பூசிகள் தயாரிப்பு வளாகத்தை இயக்கிட ஒன்றிய அரசு பல்வேறு முனைப்புக்கள் மூலம் முயற்சிகள் மேற்கொண்டது. 202022 கால கட்டத்தில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு தனியார் பங்கேற்பு முறையில்

ஆலையை இயக்கி உற்பத்தியை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தல், செயலாக்க முன்மொழிவு ஆகியவற்றை அரசுக்கு சமர்ப்பிக்கும் படி வேண்டுதல் விடுக்கப் பட்டது. துவக்கத்தில் ஒருசில தனியார் நிறுவனங்கள் ஆர்வம் காண்பித்தன. ஆனால், இறுதியாக எவரிடமிருந்தும் முன்மொழிவுடன் கூடிய கோரிக்கைகள் வரவில்லை."

அன்றைய முதல்வர் கோரிக்கையை ஏற்க மறுப்பு.

2021 ஆம் ஆண்டில் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற உடனேயே, கொரோனா தடுப்பூசியை தட்டுப்பாடு இல்லாமல் தமிழ்நாடு மக்களுக்குக் கிடைத்திடும் நோக்கில் இந்த ஆவையை செயல்பாட்டுக்கு கொண்டு வரவும் உடனடியாக தடுப்பூசி உற்பத்தியைத் தொடங்கி வேண்டும் என்ற வேண்டுகோள்தனை விடுத்தார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு சில நாட்களில் செங்கல்பட்டு அருகே அமைந்துள்ள இந்த ஒருங்கிணைந்த வேக்சின் ஆலை வளாகத்தைப் பார்வையிட்டதுடன், ஆலையே இயக்கும் பொறுப்பை தமிழ்நாடு அரசுக்கு தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் ஒன்றிய அரசுக்கு வைத்தார். இது தொடர்பாக ஒன்றிய அரசுக்கு விரிவான முறையான கடிதம் ஒன்றையும் எழுதினார்.

அதனைத் தொடர்ந்து திமுக அரசும் அன்றைய முதல்வர் தளபதி அவர்களும் ஹெ.பி.எல். தடுப்புசி ஆலையை தமிழ்நாடு அரசு ஏற்று நடத்திட பலகட்ட முன்னெடுப்புகளையும் முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னரும் ஒன்றிய அரசு அதனை ஏற்கவில்லை. இந்நிலையில், சென்ற ஏழு ஆண்டுகளாக இந்த அதிநவீன ஒருங்கிணைந்த தடுப்பூசி ஆலை வளாகம் இயக்கப்படாமல் பயன்பாடின்றிக் கிடக்கிறது என்ற உண்மை அமைச்சரின் பதில் வழியாக தற்போது தெரிய வந்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் நினைவுநாளில், புதுடெல்லியில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி வணங்கினர்.



ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் மஸ்கட் மாநகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி சிவசெந்தில் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர்கள் திருமாவளவன், முகமது பாரூக், அயுப் கான், பாக்கியராஜ் மற்றும் அனைத்து கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாட்டில் அதிகரித்து வரும் தூக்கக் கோளாறுகள், அவற்றால் உடல்–மன நலத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு

# விழிப்புணர்வு - சிகிச்சை வசதிகளை வலுப்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.9-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், ஆகஸ்ட் 7, 2026 அன்று மக்களவையில், நாட்டில் அதிகரித்து வரும் தூக்கக் கோளாறுகள், அவற்றால் உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படும் பாதிப்புகள், விழிப்புணர்வு, சிகிச்சை வசதிகள் மற்றும் முதன்மை சுகாதார சேவைகளில் தூக்கக் கோளாறு மேலாண்மையை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் அளித்த பதிலில், தேசிய மனநல ஆய்வு மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் ஆய்வுகள் மனநல சவால்கள் மற்றும் சிகிச்சை இடைவெளிகளை அடையாளம் காண உதவியுள்ளதாக தெரிவித்தார். மனநல பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் தேசிய மனநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், அதன் மாவட்ட மனநலத் திட்டம் நாட்டின் 767 மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளதாகவும் கூறினார்.

இதன் கீழ் வெளிநோயாளர் சிகிச்சை, ஆலோசனை, உளவியல் ஆதரவு, மருந்துகள், வெளிச்சேவை மற்றும் மாவட்ட அளவில் 10 படுக்கைகள் கொண்ட உள்நோயாளர் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், நாடு முழுவதும் 1.8 லட்சத்திற்கும் மேற்பட்ட துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்களாக மேம்படுத்தப்பட்டு, மனநல சேவைகள் அவற்றில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். மனநலப் பயிற்சி வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், மனஅமைதி, ஒய்வுப் பயிற்சி, ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் நல்ல தூக்கப் பழக்கங்களை ஊக்குவிக்கும் ஊக்குவிக்கும் நலவாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 'பிட் இந்தியா' உள்ளிட்ட இயக்கங்கள் ஆரோக்கியமான தூக்கத்திற்கு தேவையான உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்து வருவதாகவும் கூறினார்.

தேசிய தொலை மனநலத் திட்டத்தின் கீழ் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 53 டெலிமனாஸ் மையங்கள் செயல்பட்டு வருவதுடன், 20 மொழிகளில் 42 லட்சத்திற்கும் அதிகமான அழைப்புகள் கையாளப்பட்டுள்ளன. மனஅழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வால் ஏற்படும் தூக்கப் பிரச்சினைகளுக்காக 24 மணி நேரமும் இலவச தொலைபேசி ஆலோசனை, உளவியல் வழிகாட்டுதல், ஆரோக்கியமான தூக்க முறைகள் குறித்த ஆலோசனை மற்றும் தேவைக்கேற்ப மருத்துவமனைகளுக்கு பரிந்துரையும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், உலக மனநல தினமான 2024 அக்டோபர் 10 அன்று டெலிமனாஸ் மொபைல் செயலியும், காணொலி ஆலோசனை வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.


